## PHONIC WAY OF

# ENGLISH READING

## WITH ESSENTIAL VOCABULARY & BASIC GRAMMAR

**சொல்-அசைமுறை ஆங்கில வாசிப்பு, குறைந்தபட்ச சொற்தொகுப்பு மற்றும் அடிப்படை இலக்கணம்**

**Prepared by**
**K.CHINNAPPAN M.A., M.Sc., B.Ed.,**
**VIVEKANANDA HIGHER SECONDARY SCHOOL,**
**THIRUPPARAITTURAI, TRICHY.**

**Published by**
**WAY TO SUCCESS PUBLICATIONS**
**Plot No.24, Ramamoorthi Nagar, Old Karur Road**
**Melachinthamani, Trichy – 620 002**

# Contents

**WARM-UP FOR ENGLISH READING**

01. Introduction to English alphabets and handwriting practice……………….. **6**
02. English letters and sounds ……….. ……………………………………….. **15**
03. Two letter sounds ………..………………………………………………… **19**

**READING TECHNIQUES AND PRACTICES**

04. Letter combination techniques based on the vowel 'a' …………………..... **22**
05. Letter combination techniques based on the vowel 'e' ……………………. **25**
06. Letter combination techniques based on the vowel 'i' …………………….. **27**
07. Letter combination techniques based on the vowel 'o' …………………..... **29**
08. Letter combination techniques based on the vowel 'oo' ………………….. **31**
09. Letter combination techniques based on the vowel 'u'…........................... **33**
10. Letter combinations techniques based on 'y' ………................................. **35**
11. Varied Consonant sounds ………………………………………………... **36**
12. Consonant Blends and Consonant clusters …………………………………. **37**
13. Differentiate the words – oral practice ………......................................... **38**
14. Letters that are not pronounced …………………………………………….. **39**
15. Phonetic symbols & Transcription …………………………………………. **43**
16. Role of Syllabification in English Reading ………………………………… **46**
17. Prefix and Suffix …………………………………………………………… **48**
18. Compound words …………………………………………………………... **49**
19. Words with same sounds – Homophones……. ……………………………. **51**
20. Stress and Intonation ……………………………………………………….. **53**

**ESSENTIAL VOCABULARY & BASIC GRAMMAR**

21. Classified Vocabulary ………………………………………………………. **60**
22. Parts of Speech …………………………………………………………….... **65**
23. Kinds of Nouns ……………………………………………………………... **69**
24. Singular Plural Nouns ……………………………………………………… **70**
25. Gender of Nouns …………………………………………………………… **71**
26. Personal Pronouns ………………………………………………………….. **72**
27. Three forms of Adjectives ………………………………………………….. **73**
28. Prepositions ………………………………………………………………… **74**
29. Action words – Verbs and its forms………………………………………… **77**
30. Making of Sentences ……………………………………………………….. **80**
31. Tenses ………………………………………………………………………. **82**
32. Making Negative Sentences - Table ………………………………………... **86**
33. Making Questions - table …………………………………………………... **87**
34. Sentence pattern …………………………………………………………… **91**
35. Active Voice & Passive Voice Table ………………………………………. **95**

**FOLLOW-UP PRACTICES**

36. Parallel Sentences for Practice ……………………………………………... **100**
37. Simple English to speak & Dialogue – oral practice………………………… **102**
38. Tongue Twisters for oral practice …………………………………………… **105**
39. Proverbs for reading practice ……………………………………………….. **107**
40. School functions - Sample Speeches ……………………………………….. **108**
41. Small Stories for reading practice …………………………………………… **110**

**ANSWERS FOR ALL EXERCISES** ……………………………………………… **113**

**அன்பார்ந்த மாணவ மணிகளே!**

ஆங்கிலம் ஒரு அழகான மொழி. சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலோ ஸேக்சான் என்ற இங்கிலாந்தின் ஒரு பகுதியினரால் பேசப்பட்டு பிறகு லத்தீன், கிரேக்கம், ஜெர்மன், பிரஞ்சு போன்ற மொழிகளின் கலவையாக வளர்ந்த உலகின் இளைய மொழிதான் ஆங்கிலம். (தமிழ் மிகவும் பழமையானது. தமிழ் மொழி 7000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொல்லப்படுகிறது)

1800களில் பிரித்தானியப் பேரரசு உலகில் பெரும்பாகத்தை தம் ஆளுகைக்குக்கீழ் கொண்டுவந்ததும் உலக தொழிற்புரட்சியில் முக்கிய பங்கு வகித்ததும் ஆங்கிலம் விரைவாக பரவ காரணங்களாக அமைந்தன. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், வரைகதை, இணையம் என பல்வேறு ஊடகத் தொழில்நுட்பங்கள் அனைத்தும் ஆங்கில உலகிலேயே கண்டுபிடிக்கப்பட்டதும் ஆங்கிலம் உலகில் வேரூன்ற காரணிகளாகின. கணினி நிரல்மொழிகள், வலைதள கட்டமைப்பு மொழிகள், வலைநுட்ப நெறிமுறைகள் என அனைத்தும் ஆங்கிலத்திலேயே உள்ளன.

இன்று சுமார் 11,00,000 வார்த்தைகளுடன் உலகின் முன்னணி மொழியாக வளர்ந்திருக்கிறது. உலகில் உள்ள 146 மொழிகளில் இருந்தும் ஏராளமாக வார்த்தைகளை ஆங்கிலம் உள்வாங்கிக்கொண்டுள்ளது. அறிவியல் தொழில்நுட்பபுரட்சியின் விளைவாக பல்லாயிரக்கணக்கான அறிவியல் தொழில்நுட்ப சொற்களும் ஆங்கிலத்தில் உருவாகின. ஒவ்வொரு நாளும் புதிதாக 15 வார்த்தைகள் சேர்ந்துகொண்டிருக்கின்றன. இன்று சுமார் 1,80,00,00,000 மக்கள் அல்லது உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் ஆங்கில மொழியை பேசுகின்றனர்.


அறிவியல், மருத்துவம், வணிகம், ஊடகம், அரசியல் என அனைத்துத் துறைகளிலும் இம்மொழியின் தாக்கம் மிகவும் அதிகம். ஆங்கில மொழி கற்பது காலத்தின் கட்டாயம். உலகில் எங்கு சென்றாலும், என்ன தொழில் செய்தாலும் ஆங்கிலம் தெரிந்தால் எளிதாக மற்றவர்களிடம் தொடர்பு கொள்ள முடியும். அறிவியல் தொழில்நுட்பங்கள், பொருளாதார, வியாபார நுணுக்கங்கள், அறிவுக்களஞ்சியங்கள், பல்வேறு துறைகளின் முன்னணி நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே உள்ளது.

தொடக்கக் கல்வியினை நமது தாய்மொழியிலேயே படித்தாலும் உயர்கல்வி என்பது ஆங்கிலத்தின் துணையின்றி படிக்க இயலாது என்பதே மறுக்கமுடியாத உண்மை. தமிழ்வழியில் படிக்கும் இலட்சக்கணக்கான மாணவர்களில் ஆங்கிலத்தில் வாசிக்கக்கூட இயலாமல் தங்கள் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கும் மாணவர்கள் ஆங்கிலத்தை சரியாக வாசிக்கத் துவங்கி 'ஆங்கிலம்' என்ற அமிர்தத்தை ருசிக்கத் துவங்கவேண்டும் என்பதே இந்நூல் அமைவதற்கான அடிப்படை நோக்கம். ஆங்கிலத்தை எளிமையாக சரியாக வாசிக்க தேவையான அடிப்படையான தகவல்கள் இந்த நூலில் கொடுக்கப் பட்டுள்ளது. முறையாக இதனைப் படித்து தொடர்ந்து பயிற்சி எடுத்துக்கொண்டால் சுலபமாக ஆங்கிலம் வாசிக்கலாம். வாங்க வாசிப்போம்!

நூலாக்கத்தில் எனக்குத் துணைநின்று பக்கபலமாக விளங்கி உதவிய திரு.கார்த்திகேயன், திருமதி.கலைச்செல்வி மோகனரங்கன், திருமதி. தேவிகா சுரேஷ் மற்றும் திரு.தினேஷ் ஆகியோரையும், இந்நூலின் Classified Vocabulary பகுதியினை அளித்து உதவிய விழுப்புரம் மாவட்டம் சத்தியமங்கலம் அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியரும் தேசிய நல்லாசிரியர் விருதுபெற்றவருமான திரு.திலீப் அவர்களையும், இந்நூலை எழுதத் தூண்டிய எமது பள்ளி தலைமையாசிரியரும் நல்லாசிரியர் விருது பெற்றவருமான திரு.பொ.திருநாவுக்கரசு அவர்களையும், இந்நூலுக்கான பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய திருச்சி ஜமால் முகமது கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திரு. பர்வாஸ் ஷெரிப் அவர்களையும், திருச்சி அண்ணா பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியை திருமதி.ரேணுகா ஜெகதீசன் அவர்களையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

**கே.சின்னப்பன், பட்டதாரி ஆசிரியர்,**
**விவேகானந்த மேல்நிலைப்பள்ளி,**
**திருப்பராய்த்துறை, திருச்சி.**

**புத்தகங்கள் வேண்டுவோர்**
**9787609090, 9787201010**
**ஆகிய எண்களைத் தொடர்புகொள்ளுங்கள்**


PUSH YOURSELF
BECAUSE, NO ONE
ELSE IS GOING
TO DO IT FOR YOU.


“There
is no substitute
for hard
work.”
Thomas Edison